தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2025
-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் தகவல்களும் உள்ளடங்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின்

பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடியபொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளைதவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறானஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளககட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்துநிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாகஎன்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 30,408,641 ஆன மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,150,386 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் 1,741,745 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சம்பளம் மற்றும் வேதனங்கள் செலவினம் மற்றும் கல்வி நிகழ்ச்சிகளின் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சீதுவ கட்டிட வளாகத்தின் நிர்மாணத்திற்காக 2025 ஆம் ஆண்டின் போது | சீதுவ கட்டிட தொகுதியின் நிர்மாணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை செலவின மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளில், | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை செயற்திறனாகவும் பயனுள்ள |

| | | |
|---|---|---|
| ரூபா 180,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இதில் ரூபா 29,570,000 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், ரூபா 1001,310,000 செலவில் கட்டப்பட்ட இக்கட்டிட வளாகத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாததால் அந்த நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான போதுமான இடத்தையும் வசதிகளையும் அது வழங்கத் தவறிவிட்டது. | 2025 ஆம் ஆண்டிற்காக ரூபா 97.85 மில்லியன் தொகை மட்டுமே எஞ்சியிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டின் மூலம் 2025 ஆம் ஆண்டில் அடிப்படை செலவு மதிப்பீட்டின் படி, கேட்போர்கூடம், பாதுகாப்பு அறை மற்றும் முகப்புச் சுவர் கட்டுதல், சிசிடிவி கேமராக்கள் பொருத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததாகவும். இந்தப் பணிகளில், முடிக்கப்பட்ட பகுதிகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 29.57 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 180 மில்லியன் ஒதுக்கீடுகளில், ரூபா 30 மில்லியன் கேட்போர் கூடத்திற்கான நாற்காலிகள் வாங்குவதற்கும் ரூபா 86.86 மில்லியன் அத்தியாவசியமான மேலதிக நிர்மாணப் பணிகளுக்கு எனவும். இந்த மேலதிக கொள்வனவு மற்றும் நிர்மாணங்கள் அனைத்தும் அடிப்படை செலவு மதிப்பீட்டில் குறிப்பிடப்படவில்லை. என்னற்ற போதும் அத்தியவசியமானதாகும். இதற்காகக் கோரப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 116.86 மில்லியன் ஆகும். 2025 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட ரூபா 180 மில்லியன் நிதி ஏற்பாட்டில், ரூபா 29.57 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டது. | வகையிலும் பயன்படுத்தி உரிய காலப்பகுதியில் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மை கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பிரிவு, 2024 செப்டம்பர் 4 மற்றும் 5 ஆகிய திகதிகளில் சமூகப் சேவைகள் தொடர்பான ஒரு சர்வதேச மாநாட்டை நடத்தியது. இதில் 228 உள்ளார் மற்றும் வெளிநாட்டுப் பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டிருந்ததுடன். அதற்கான கட்டணத்தை, நிறுவனத்தின் காசாளராக உத்தியோகத்தர் இருக்கையில் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளரால் | 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வதேச சமூகப் சேகைள் மாநாட்டிற்காக, இந்த நிறுவனத்திற்கு ரூபா. 548,420.16 தொகை கிடைக்கப் பெற்றிருந்தது. ஆராய்ச்சி பிரிவின் மூலம் 2024 செப்டம்பர் 04 மற்றும் 05 ஆகிய இரண்டு தினங்களில் நடைபெற்ற 3 ஆவது சமூகப் சேவைகளில் மாநாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டினர் நிறுவனத்திற்குச் செலுத்திய பணத்திலிருந்து, ஆராய்ச்சிப் பிரிவு L/23-434152 மூலம் அ.டொலர் 100 மற்றும் | தொடர்புடைய நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்களுக்கு இணங்க, வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாநாட்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 90,000 தொகை மற்றும் L/23 பற்றுச்சீட்டுக்கள் மூலம் அறவிடப்பட்ட அ.டொலர் 150 ஆகியவற்றை அவரால் அறவிடப்பட்டு தனிப்பட்ட முறையில் ரூபாயாக மாற்றி, 2024 செப்டம்பர் 11 ஆந் திகதி ரூபா 150,000 ஐ காசாளரிடம் ஒப்படைத்திருந்தார். | L/23-434157 மூலம் அ.டொலர் 50 பெற்றிருந்தது. நிறுவனத்திற்கு அவ்வாறு பெற்றுக்கொண்ட டொலர்களை நிறுவனத்தில் டொலர் கணக்கொன்று இல்லாததால், பெறப்பட்ட டொலர்களின் மதிப்பு தலா ரூபா 300 ஆகவும், டொலர் 150 இற்கு ரூபா 45,000 உடன் மாநாட்டில் பங்கேற்ற 7 வெளிநாட்டினருக்கான ரூபா 105,000 உடன் ரூபா 150,000 தொகை 2024.09.11 ஆந் திகதி பிற்பகலில் கணக்குப் பதிவிற்காக நிறுவனத்தின் கணக்குப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,230,000 பெறுமதியான 10 மடிக்கணினிகளை வாங்குவதற்கான பெறுகை செயல்முறையின் போது, 2024 ஆம் ஆண்டின் பொருட்கள், சேவைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான கொள்முதல் வழிகாட்டுதல்களின் 1.5 (ஈ), 2.3, 2.4 (இ), 2.5, 4.1.1, 4.1.2 மற்றும் 4.1.3 பந்திகள் மற்றும் பெறுகை கையேட்டின் பந்திகள் 2.4 (ஆ)(X), 2.7.4 (ஆ) 2.7.4 (இ)(III), 04 (ஈ) பந்தியின் இணைப்பு பின்னிணைப்புகள் I,II,III மற்றும் 5.2 ஆம் பந்திகள் பின்பற்றப்படவில்லை. | ஏலதாரர்கள் ஏலத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாய கூறறற்றை இனிவரும் காலங்களில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பெறுகை முகாமைப் பிரிவை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாகவும். ஒரு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக, பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததற்கான காரணங்கள் விசாரிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், எதிர்காலத்தில் இது போன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் இருப்பதும் உறுதி செய்யப்பட வேண்டும். |

**4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் நோக்கத்திற்குட்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றமும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களைப் புனரமைப்பதற்காக ரூபா 07 மில்லியனும், மூலதன உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 43 மில்லியனும் | திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, புனரமைப்புச் செலவுகளுக்காக ரூபா 7 மில்லியனும், மூலதனச் சொத்துக்களைக் கையேற்பதற்காக ரூபா 43 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், | வருடாந்தம் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றாமைக்கான காரணங்கள் விசாரிக்கப்பட வேண்டும், மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தடுக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், வாகனப் புனரமைப்பில் 55 சதவீதமும், மூலதன உபகரணக் கொள்வனவில் 47 சதவீதமும் மட்டுமே நிறைவடைந்துள்ளன. இதற்காக ரூபா 23.95 மில்லியன் செலவிடப்பட்டு, மொத்த ஒதுக்கீட்டில் 48 சதவீதம் மட்டுமே செலவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூலதன உபகரணத் தேவைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்யத் தவறியதால், பாடநெறிகளின் தரமும், அப்பாடங்களைப் பயிலும் மாணவர் சமூகத்திற்குத் தேவையான வசதிகளை வழங்குவதும் முறையாக அடையப்படவில்லை. | ரூபா 23.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மேலும், பெறுகை திட்டத்தின் படி, கல்விச் செயல்பாடுகள் தொடர்பான அனைத்துக் பெறுகைகளும் (நூலகப் புத்தகங்கள், கணினிகள் மற்றும் இலகு அட்டடை (Smart Board) ரூபா 23.95 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | வகையில் யதார்த்தமான செயல் நடவடிக்கை திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கை திட்டத்தின் படி, சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியிலிருந்து ரூபா 06 மில்லியன் செலவில் 08 வாகனங்கள், 13 அலுவலக உபகரணங்கள், 09 குளிரூட்டிகள் மற்றும் 02 பிராந்திய நிலையங்கள் புனரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டில் எந்தப் பணியும் முடிக்கப்படவில்லை. | வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் குறித்த தொழில்நுட்ப அறிக்கைகளைப் பெறுவதற்குத் தகுதியான தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சேவைகளைப் பெறுவதில் ஏற்பட்ட சிக்கலான சூழ்நிலை காரணமாக, ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியவில்லை.<br><br>பிராந்திய நிலைங்களைப் பழுதுபார்ப்பதற்குத் திறைசேரி நிதி போதுமானதாக இருந்த காரணத்தால், நிறுவனத்தின் நிதி பயன்படுத்தப்படவில்லை. | வருடாந்தம் திட்டமிடப்பட்ட பணிகளை முடிக்காததற்கான காரணங்கள் விசாரிக்கப்பட வேண்டும், மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் யதார்த்தமான செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 27.63 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், மீளாய்வாண்டில் ரூபா 3.07 மில்லியன் அளவிலான செயற்பாடுகள் மாத்திரமாக இருந்தது. அதாவது, நிதி முன்னேற்றம் 11 சதவீதமாகவும், பௌதீக முன்னேற்றம் சுமார் 18 சதவீதமாகவும் இருந்தது. அதன்படி, நிதியின் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. | நிறுவனத்தின் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 27.63 மி. நிதிஏற்பாட்டில், ரூபா 8.5 மில்லியன் புனரமைப்பு மற்றும் கையேற்கப்பதற்காக இருந்த போதும் ஆனால் அந்த நிதி செலவிடப்படவில்லை எனவும் மீதமுள்ள தொகையான ரூபா 19.13 மில்லியன் கல்வித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டது. அந்த நிதியிலிருந்து, செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி | நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படாததற்கான காரணங்கள் விசாரிக்கப்பட வேண்டும், மேலும் எதிர்காலத்தில், தேவை கண்டறியப்பட்டு, நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு, தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நூலகம், பாலின சமூக தொடர்பான நிலையம் மற்றும் தர உறுதி நிலையத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 3.07 மில்லியன் செலவிடப்பட்டதாகவும். மீதமுள்ள தொகையான ரூபா 16.06 மில்லியனில், ரூபா 13.39 மில்லியன் தர உறுதி நிலையத்தின் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதும், ஆனால் தர உறுதி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட முக்கியப் செயற்பாடு பாடநெறி மீளாய்வை நடத்துவதாகும். | |
| (ஈ) | தர முகாமைத்துவப் பிரிவினால் நிறுவனத்தின் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக, 6 திட்டங்கள் மற்றும் 6 செயலமர்வுளை நடத்துவதற்கு ரூபா 4 மில்லியனை நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த போதும் ரூபா 0.20 மில்லியன் செலவில் 02 செயலமர்வுகளும் 03 திட்டங்களும் மட்டுமே நடத்தப்பட்டன. அதன் பிரகாரம் நிதி முன்னேற்றம் 5 சதவீதமாகவும், பௌதீக முன்னேற்றம் 58 சதவீதமாகவும் இருந்தது. அதன்படி, நிறுவனத்தின் அனைத்துத் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக அதனிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட திட்டமிடப்பட்ட பணிகளில் 58 சதவீதம் மட்டுமே நிறைவேற்றப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக இணைப்புச் செயல்பாடுகள் காரணமாக, SCAQA-ஆல் பாட மீளாய்வு நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டன. இது தொடர்பாக கல்வி விவகார சபை (AAB) மற்றும் ஆளுகை குழுவின் மூலமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக. இந்தச் சூழ்நிலையில், தர உறுதிப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் நிறுவனத்தின் ஏனைய செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக. | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தாததற்கும், நிகழ்ச்சிகளை எதிர்பார்த்தபடி நடத்தப்படாமைக்கான காரணங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியதுடன், எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தடுக்க யதார்த்தமான அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |